# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## அல்லாஹ்வின் பண்புக்கூறுகள் (பகுதி 1)

**21 FEBRUARY 2020**

**(26 Jamadi'ul Aakhir 1441 AH )**

ஹஸ்ரத் கலீப்.ஃ.த்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)


வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

بسم الله الرحمن الرحيم

# The Signs of Allah (Pt. 1)

## அல்லாஹ்வின் பண்புக்கூறுகள் (பகுதி 1)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹ்ஹுத், தஅவ்வுசு மற்றும் அல்.ஃ.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையினை நிகழ்த்தினார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்!கடந்த வாரம் உங்களிடத்தில் நான் கூறியது போலவே 'அல்லாஹ்வின் பண்புகள்' குறித்து தொடர்ச்சியான சொற்பொழிவுகளை வழங்குவேன்.பல வாரங்களுக்கு முன்பு இந்த சொற்பொழிவுகளை தயாரிக்கத் தொடங்குவதற்கு முன்,வழக்கம் போல் நான் வழிகாட்டுலுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறேன்,உடனடியாக அல்லாஹ், நான் அவனுடைய பண்புகள் குறித்து சிறிதளவுப் பேச வேண்டும் என்பதை எனக்குப் புரிய வைத்தான். உண்மையில் ஒவ்வொரு முறை வெள்ளிக்கிழமை வருகின்றபோதும், நான் (ஜுமுஆ குத்பா) சொற்பொழிவு வழங்க வேண்டியதுள்ளது, (அதன் நிமித்தம்) அல்லாஹ் எனக்கு ஒரு குறிப்பிட்ட தலைப்பின் பக்கம் வழிகாட்டுவது ஒரு ஆன்மீக அருளாகும்.அல்லாஹ்வின் இப்படிப்பட்ட வெளிப்பாடுகள் மற்றும் அடையாளங்கள் அனைத்தும் அல்லாஹ்

தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியானை எவ்வாறு வழிநடத்துகின்றான் என்பதைக் காட்டுகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

ஆகவே, அல்லாஹ் (சுபுஹ) எனக்குப் புரியவைத்ததன்படி, எனது காலத்திற்கு முன்பும் கூட அல்லாஹ் தன்னுடைய மற்ற தூதர்களுக்கும் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் வழிகாட்டியிருக்கலாம்,மேலும்

இதே விளக்கங்களையும் வழங்கியிருக்கலாம்.அதனால்தான் அல்லாஹ்வின் தூதர்கள் ஒரு சங்கிலியை போன்றவர்கள் என்று நாம் கூறுகின்றோம், இதன் மூலம் ஒவ்வொரு இணைப்பும் மற்றொரு இணைப்புடன் சேர்ந்து, அனைத்து இணைப்புகளும் ஒரு சங்கிலியை உருவாக்கிவிடுகிறது,மேலும் அந்த சங்கிலியின் மதிப்பை உயர்த்துவதற்கும்,அதனை மிகவும் அழகானதாக,, கவரக்கூடியதாக வடிவமைப்பதற்கும், அதற்கு உண்மையான மதிப்பையும் பிரகாசத்தையும் வழங்குவதற்கும், ஓர் (அலங்காரப்) பதக்கத்தின் அவசியம் உள்ளது .ஆக,இந்த (அலங்காரப்) பதக்கம் இல்லையென்றால், அந்த சங்கிலிக்கு உண்மையான மதிப்பும் இருக்காது; அது அதன் அனைத்து பிரகாசத்தையும் (பொலிவையும்) இழந்துவிடுகின்றது. ஆகவே, அல்லாஹ்வின் தூதர்களாகிய நாங்கள் அனைவரும் ஒரே வார்த்தையைப் பேசுகின்ற ஒரே குடும்பத்தினர் ஆவோம், அல்லாஹ்(சுபஹ) பூமிக்கு அனுப்பியிருந்த ஒவ்வொரு தூதரின் உண்மையான மதிப்பையும் புதுப்பிக்கின்றோம்;[உண்மையில்],எல்லாத் தூதர்களுமே, பூமிக்கு அல்லாஹ் அனுப்பிய ஒவ்வொரு தூதரின் உண்மையான மதிப்பையும் புதுப்பிக்கின்றார்கள். இன்னும் நபிமார்களாகிய நாங்கள் அனைவரும் எங்கள் தலைமை எஜமானருக்குப் பின்னால் ஒன்றிணைகின்றோம்.மேலும் ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்களே எல்லா தூதர்களுக்கும் தலைமை எஜமானர் ஆவார்கள்.

இதனால்தான், அவர்களின் வருகையுடனும், அதற்கு முன்பும் கூட , அவர்களுக்கு முன் வந்த தூதர்கள் அவர்களைப் புகழ்ந்திருந்தார்கள்;மேலும் அவர்களுடைய வருகையைப் பற்றி முன்னறிவிப்பும் செய்திருந்தார்கள், அதனால் அவர்களுடைய மதிப்பையும், மகத்துவத்தையும் நாம் அறிவோம். அதன் காரணமாக அவர்களது வருகையானது, அவர்களுக்கு முன்னுள்ள தூதர்களின் மூலமாக கொண்டுவரப்பட்ட அல்லது ஏற்கனவே இருந்(து கொண்டுருந்)த அனைத்து இறைப்போதனைகளையும் உள்ளடக்கியுள்ளது. அதனால்தான் (கண்மணி நாயகம் எம்பெருமானார்) ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை 'ரஹ்மத்துல்-லில்-ஆலமீன்- அனைத்து பிரபஞ்சத்திற்கும், எல்லா மக்களுக்கும் அவர்கள் ஓர் அருள்கொடை ஆவார்கள் என்றும், அவர்கள் கொண்டுவந்த தூதுச் செய்தியும், மார்க்கமும் அனைத்து மனித குலத்திற்கும் உரியது' என்று குர்ஆன் நம்மிடம் கூறியது.இந்த பெரிய பதக்கத்திற்கு உண்மையான மதிப்பைக் கொடுப்பதன் மூலம், அது எல்லா நேரத்திலும் பளபளப்பாகவும், அழகாகவும், கவரக்கூடியதாகவும் இருக்க வேண்டுமென்றால் பிறகு, ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர்களது தூய்மையான மற்றும் உண்மையான போதனைகளை புதுப்பிப்பதற்காக அல்லாஹ்விடமிருந்து வரக்கூடிய ஒருவரத

அவசியம் உ ள்ளது. அதனால் [மக்களை] நேரடியாக ஏக இறைவனிடம் வழிநடத்தக் கூடியதும், அவனது அன்பை பெறக் கூடியதுமான அத்தகைய போதனைகளில் எவ்விதப் புதுமை(பித் அத்தும்) இருப்பதில்லை.

எனவே, இப்போது இறைவனின் பண்புகளைப் பற்றி பார்ப்போம்: அல்லாஹ்வின் பண்புகள் அனைத்தையும் நீங்கள் கூர்ந்து ஆய்வு செய்யும் போது, அவற்றின் மூல ஆ தாரம் சூரா அல்-ஃபாத்திஹாவில் காணப்படுகின்ற இந்த நான்கு முக்கிய பண்புகளிலிருந்தே வருகின்றது.**ஹாமித்** போன்ற ஒரு குறிப்பிட்ட பண்பினை நீங்கள் ஆய்வு செய்யும் போது, அது சூரா அல்-

ஃபாத்திஹாவில் குறிப்பிடப்பட்டுள்ள அதாவது:ரப்புல் ஆலமீன், ரஹ்மான், ரஹீம் மற்றும் மாலிகி-யவ்மித்-தீன் ஆகிய நான்கு பண்புகளுடன் தொடர்புடையது அல்ல.ஆனால் சூரா அல்-ஃபாத்திஹா ஹம்துடன் தொடங்குகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.மேலும் ஹம்தின் பண்பு

அல்லாஹ்வுடனும், அல்லாஹ்வின் பிற பெயர்களுடனும் சம்மானத் தொடர்புடையதாகும். சமமாக இந்த எல்லா நான்கு பண்புகளுடனும் இணைக்கப்பட்டுள்ளது.மேலும் அரபு மொழியில் ஹம்த் என்ற சொல்லை இந்த நான்கு பண்புகளுடன் சமமாக பொருந்தச் செய்வது மிகவும் சரியாக இருக்கும்.

எனவே ஹாமித் என்ற வார்த்தையை குறிப்பிடுவதற்குப் பதிலாக, ஹம்த் என்ற வார்த்தையின் குறிப்பு உள்ளது,இது மற்ற எல்லா பண்புகளுடனும் தொடர்புடையது.மேலும் இதுவும் அவசியமானது, ஏனென்றால் ஹம்திலிருந்து பிரிக்கப்பட்ட எந்தவொரு பண்பும் முழுமையாக மற்றும் சரியான பண்பாக இருக்காது. ஏனென்றால் ஹம்த் என்ற பொருளுக்கே ஒரு விஷயம் முற்றிலும் தூய்மையாவதும், அனைத்து தீமைகளும் மறைந்துவிடுவதுமாகிய தேவையுள்ளது.எனவே ஹம்த் மிகவும் பரந்த மற்றும் ஆழ்ந்த பொருளைக் கொண்டுள்ளது..மேலும் சூரா அல்-ஃபாத்திஹாவில் அது குறிப்பிடப்பட்டுள்ள விதமானது அது கொண்டுள்ள தூய்மையை நிரூபிக்கின்றது.எனவே ரஹ்மானாகிய ஒருவரிடம் ஹம்த் இல்லையென்றால் அவரில் ஏதோ தோல்வி உள்ளது என்பதேப் பொருளாகும்.அவர் [அந்த ஒருவர்] எல்லா புகழுக்கும் தகுதியானவரல்ல. மேலும் இவ்வுலகில் நம்மிடம் இவ்வாறான ரஹ்மான் நிறைய இருக்கிறார்கள்; அவர்கள் பரிதாபத்தில் எல்லா வரம்புகளையும் மீறி எந்த சமநிலையற்றவர்கள் ஆவார்கள்.உதாரணமாக, தங்கள் மகன்களை தீவிரமாக நேசிக்கும் தாய்மார்கள் அவர்களைக் கெடுத்து விடுகிறார்கள்; அதேப்போன்றே மகள்களை நேசிக்கின்ற தந்தைமார்களும் ஆவர்.ஆகவே, ஒரு பண்பு எவ்வளவு நல்லதாக இருந்தாலும் கூட,அப்பண்போடு

ஹம்தின் பண்பை (மிகச்)சரியாகப் பொருந்தாத வரை, அப்பண்பில் பின்னர் சில குறைபாடுகள் இருக்கவே செய்யும் .எனவே மீத் என்ற சொல் அல்லாஹ்வின் அனைத்து பெயர்களுக்கும் பொருந்தும் என்பதை சூரா அல்-பாத்திஹா நமக்குக் காட்டியுள்ளது.இது [அல்லாஹ்வின் ஹாமித் / ஹம்த் என்ற சொல்], இல்லாமல் அல்லாஹ்வின் பிற பண்புகளில் எந்தவொரு கருத்தும் இருக்க முடியாது.

இது ஒரு புறம் இருக்க, மேலும் சில பண்புபெயர்களும் உள்ளன அவை சூரா ஃபாத்திஹாவில் உள்ள பண்புப்பெயர்களோடு ஆழ்ந்த தொடர்பு கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். அல்லாஹ்(சுப்ஹ்) இந்த அருளையும் (இவ்வாய்ப்புடன்) நுண்ணறிவையும் வழங்குவதோடு சுவனத்தின் ஞானத்தையும் அளித்தால் அப்போது சூரா அல்-ஃபாத்திஹாவில் குறிப்பிடப்பட்டுள்ள பண்புகள் (ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள அந்த நான்கு) அல்லாமல் வேறு பண்புகள் இல்லை என்பதை காண்பீர்கள். அல்-ஹக் என்னும் பண்புப்பெயரை எடுத்துக்கொண்டால், உண்மையே உருவானவன் என்று பொருள்படும் அல்லாஹ்வின் பெயராகும். ஹக் என்பது உண்மை என பொருள்படும். உண்மை வெறும் ஒரு பண்பாகும் ஆனால் அல்-ஹக் என்று நாம் கூறும்போது அது உண்மையால் நிரப்பப்பட்டவரைக் குறிக்கும். அவரிடம் பொய்யே இருக்காது. அல்ஹக் என்ற வார்த்தை உண்மை தொடர்பான மிகப்பெரிய அறிமுகத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இப்போது கேள்வி என்ன வென்றால்: இங்கு அல்ஹக் என்ற வார்த்தை எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது? அல்லாஹ் உண்மையாளன் என்பது இந்த நான்கு பண்புகளில் எதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

எனவே இந்த சூழலில் சில விஷயங்களை [விளக்கங்களை] உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இது ஒரு அறிவு சார்ந்த விவாதம் அல்ல, ஆனால் அல்லாஹ்வையும் அவனது உண்மை பண்புகளையும் கொண்டு நம் தொடர்பை நாம் நன்கு பிரதிபலிக்க வேண்டியது அவசியம் ஆகும். அதனால் ஜமாஅத்தில்

ஒரு ஆழமான உண்மையை உருவாக்குகிறோம், எனவே இந்த பண்புகளை நமக்குள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஒரு நபர் இதையெல்லாம் ஆராய்ந்தால், அவர் ஏன் பொய் சொல்கிறார் என்பதை தெரிந்து கொள்வார். தன் பொய்களால் அவர் தன்னையே வருத்திக்கொள்ளும் போது உண்மையாளனான அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளாததால் அல்லாஹ்வின் தயவை இழக்க நேரிடும் என்பதை அறிவார். அம்மாதிரி மக்களுக்கு இது பற்றிய தெளிவு கிடைக்கும் போது அவர்கள் தங்கள் மீது கொண்டுள்ள உறுதியால் தங்களுடைய உண்மைத்துவத்தின் நிலையை உயர்த்திக்கொள்வார்கள். மக்கள் பொய் சொல்வதற்கான காரணங்களில் ஒன்று அவர்கள் தங்களுக்கு கொஞ்சமும் பொருத்தமற்ற பாராட்டை தேடுவது தான். புகழைப் பெற விரும்பும் மக்கள், முகஸ்துதி விரும்புவோர், அது தனக்கு கிடைக்காத பட்சத்தில் பொய் சொல்லத் தொடங்குகிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி பேசுகையில், அல்லாஹ் புனித குர்ஆனில் சூரா ஆல-இம்ரானில் கூறுகிறான், பாராட்டை பெற விரும்பும் மக்கள், அவர்கள் செய்யாத காரியங்களுக்காக முகஸ்துதியை எதிர்பார்ப்பவர்கள்தான் பொய்யை பின்பற்றுகிறார்கள். பாராட்டை பெற வேண்டுமென்ற ஆர்வமே பொய்க்கான எண்ணற்ற காரணங்களில் ஒன்றாகும்.

எனவே நீங்கள் அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லும்போது, அதே நேரத்தில் அல்லாஹ் (சுப்ஹ்) எத்தகையவன் என்றால் அவன் எல்லா பொய்களையும் பொய்மையை விட்டும் தூய்மையானவன் என்று நீங்கள் சாட்சியமளிக்கிறீர்கள். அவனுக்கு பாராட்டைப் பெறுவதற்க்கு பொய்யோ கள்ளத்தனமோ தேவையில்லை ஏனென்றால் அவனே உண்மையாளன் எல்லாப் புகழும் அவனுக்கே உரியதாகும். பொய்/கள்ளத்தனத்தின் ஆதாரம் அவனிடம் இல்லை. இறைவனை புகழ்வதை பொய்யுடனும் பொய்மையுடனும் தொடர்பு படுத்தும் சிந்தனையை நாம் ஒரு போதும் பொருள்கொண்டுவிட முடியாது,

இல்லையெனில் அது ஒரு முரண்பாடான விஷயமாக மாறியிருக்கும். ஆனால் மக்கள் ஹம்தின் எஜமானர்கள் அல்ல என்பதால், அவர்களிடம் சரியான ஹம்த் இல்லை, இதனால் அவர்கள் தங்கள் பலவீனங்களை "விரட்ட" பொய்களை ஏற்றுக்கொள்கிறார்கள், மேலும் மக்கள் அவர்களை புகழ்ந்து பேசுவதற்க்கு கற்பனை கதைகள் மூலம் "அழகாக" தொடர்புபடுத்துகிறார்கள். அல்லது, மற்றவர்கள் தங்கள் மீது அற்புதமான பொய் கதைகள் கூறுவதை அவர்கள் விரும்புகிறார்கள்.

எல்லாவித முகஸ்துதிகளும், பொய் கதைகளும், பாராட்டுகளும், இவை அனைத்தும் தீமைகளை உள்ளடக்கியதாகும், அவை நம் சமூகத்தில் நச்சுத்தன்மையை ஏற்படுத்தியுள்ளன. சமூகத்தில் - அது குடும்பத்திலோ அல்லது பிற மட்டத்திலோ அழிவை ஏற்படுத்தியுள்ளதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். வெற்று புகழ்ச்சிக்காக அவர்கள் பொய் கூறுகிறார்கள், இறுதியாக அவற்றால் சண்டைகள் மற்றும் ஒழுங்கின்மை எழுவதைக் காண்கிறீர்கள். இது நிகழும்போது, அத்தகைய நபர் தனது கண்ணியத்தை இழக்கிறார்; அவர் பேசும்போது, மற்றவர்கள் அவர் பொய் கூறுகின்றார் என கூறத்தொடங்குகின்றனர், அவரிடமிருந்து தங்கள் முகங்களைத் திருப்பிக் கொள்கின்றனர். எனவே, அத்தகைய நபர் தன்னைப் புகழ்ந்து பேசுவதிலும் பொய்களைச் சொல்வதிலும் பழகிவிட்டார் என்பதை மக்கள் ஏற்கனவே அறிவார்கள், அத்தகைய நபர் தன் சொந்த குழந்தைகளிடத்தும் தன் மரியாதையை இழக்கிறார்.

யாரோ ஒருவர் சமீபத்தில் என்னிடம் நிறைய மக்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டம் பற்றி என்னிடம் கூறினார். அப்போது ஒருவர் பேசத் தொடங்கினார், அதே கூட்டத்தில் இருந்த அவரது சொந்த மகன், அவர் கூறுவதை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று மக்களுக்கு அடையாளம் காட்டும் விதமாக அவரிடமிருந்து [அவரது தந்தையிடமிருந்து]

முகந்திருப்பிக் கொண்டான் ஏனென்றால் அவர் பொய் கூறிக்கொண்டிருந்தார். எனவே தனது சொந்த குழந்தை [மகன்] மூலம், இந்த மனிதன் தன் மரியாதையை இழந்தார். இம்மாதிரி மக்கள் போலி கௌரவம் கொள்கிறார்கள் அவருக்கு ஏதேனும் மரியாதை கிடைத்தால் அது தற்காலிகமானதாக இருக்கும் ஏனெனில் உண்மை விரைவில் வெளிவந்து இத்தகைய மக்கள் சமூகத்தில் எத்தகைய பொய்களை பரப்புகிறார்கள் என்பதையும் பகல் கனவு போன்ற கற்பனை வாழ்க்கையில் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் மக்கள் கண்டு கொள்வார்கள்.

இதோடு இன்று நான் நிறைவு செய்கிறேன். இன்ஷா-அல்லாஹ், அடுத்த வாரம் இதே கருத்தை தொடருவேன். இந்த பேருரையின் சாராம்சத்தை புரிந்து கொள்ளக் கூடிய திறனை உங்களுக்கு வழங்க, இக்குணங்கள், அல்லாஹ்வின் இந்த பண்புகளை உங்களிலேயே பிரதிபலிக்கவும் அதன் மூலம் நீங்கள் இம்மையிலும் மறுமையிலும் ஆன்மீக ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் முன்னேறவும், அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் அருள் புரிவானாக! இன்ஷா-அல்லாஹ், ஆமீன்

**Translated by:**

**S.H. Faisal**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**